19th March 1963]

திரு. கே. ஏ. மதியழகன்: தனியார் துறையில் இன்று ஐந்து பஸ்களுக்கு மேல் வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்களுடைய எண்ணிக்கை என்ன என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கேள்வி இராமனுத புரத்தில் பஸ்களுக்கு வரி கட்டுவதைப்பற்றியது. அதனுல் இந்தக் கேள்வி அதில் வாராது.

சிலட்டூர் ஏரி (அறந்தாங்கி தாலுக்கா)

*296 **கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அறந்தாங்கி தாலுக்கா சிலட்டூர் ஏரி, சோட்டுப் புலிவாத்தலையைப் புதுப்பிக்க வேண்டுமென்று அரசினருக்கு கோரிக்கைகள் வந்தனவா?

(இ) ஆமென்ருல், விபரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) வந்தன.

(இ) தஞ்சாவூர் மாவட்டம் அறந்தாங்கி தாலுகாவில் உள்ள சிலட்டூர் ஏரிக்கு தண்ணீர் வருவதற்காக சோட்டுப்புலி வாத்தலே வாய்க்காலேச் செப்பனிட்டு புதுப்பிக்கும்படிக் கோரிக்கைகள் வந்தன. இந்த வாய்க்கால் ஆழமான ஒரு பள்ளத் தாக்கைக் கடந்து வரவேண்டியிருப்பதால், அங்கே வாய்க்கா லுக்கு கரைகட்டித் தண்ணீரைத் தேக்கவேண்டி வரும். அங்குள்ள குடியானவர்கள் கரையை உடைத்துத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனுல் சிலட்டூர் ஏரிக்கு தண்ணீர் ஏருது. ஆகவே, இத் திட்டத்தை மேற்கொள்வதால் பயனில்லே யென்று தெரிகிறது.

(a) Yes.

(b) Requests were made for carrying out repairs and improvements to Chottupulivathalai channel for the supply of water to Silathur tank in Aranthangi taluk of Thanjavur district. The proposal was found to be not feasible as a deep valley has to be negotiated involving formation of the channel in embankment and the ryots enroute are likely to cut open the bund for tapping water resulting in the Silathur tank being not benefited.

சிறு பாசனத் திட்டம்

*297 **கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

அறந்தாங்கி தாலுக்கா, நரசிங்கக் காவேரியில் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் அணைகட்டும் உத்தேசமுண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: ஆம்.